தெள்ளூர் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் செயல்முறை முன்னிலை,

விடுநர்,
திருமதி.S.தேவி, தலைவர்,
தெள்ளூர் ஊராட்சி மன்றம்,
அணைக்கட்டு வட்டம்,

பெறுநர்,
திரு.சார் பதிவாளர் அவர்கள்,
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
வேலூர் மாநகரம்.

வ.ப.ஆ.எண். /2024 நாள்:-22.02.2024

பொருள்:-மனைப்பிரிவு மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் / இணை இயக்குநர் (முகூபொ) அலுவலகம் வேலூர் மாவட்டம், அணைக்கட்டு வட்டம், வேலூர் ஊராட்சி ஒன்றியம், **தெள்ளூர், கிராம சர்வே எண்**347/1, ஏக்கர் 2.15 செண்ட் அல்லது 8700 சதுரமீட்டர் பரப்பளவில் அமையும் மனைபிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் அளித்து வரைபடம் அங்கீகரித்தல் தொடர்பாக.

பார்வை:- 1. திரு.V.K.மகேஷ், த/பெ.கன்னியப்பன், கதவு எண்.22, புதிய சங்கரன்பாளையம் ரோடு, சங்கரன்பாளையம், வேலூர். மற்றும் **V.புருஷோத்தமன், E.ஆறுமுகம், G.வெங்கடேசன், P.கார்த்தி, L.லதா, T.சீனிவாசன்**

2. வேலூர் -1, வேலூர் மண்டலம், நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் / இணை இயக்குநர் (முகூபொ) அவர்களின் கடிதம் ந.க.எண்.VLR/FZGDV9Y2/121 - 2023/2023/TCP, நாள் 23.12.2023
3. தெள்ளூர் ஊராட்சி மன்ற தீர்மானம் எண்.81, நாள்:- 22.02.2024.
4. தெள்ளூர் ஊராட்சிக்கு வளர்ச்சி கட்டணமாக 22,575/- நாள்: 22.02.2024. இரசீது எண்.1921,
5. தெள்ளூர் ஊராட்சிக்கு கூராய்வு கட்டணமாக 51,000/- நாள்: 22.02.2024. இரசீது எண்.1920,

உத்தரவு:-

வேலூர் மண்டலம், மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் / இணை இயக்குநர் அலுவலகம், அணைக்கட்டு வட்டம், வேலூர் ஊராட்சி ஒன்றியம், ***தெள்ளூர் ஊராட்சி கிராமம், சர்வே எண்.347/1, 2 ஏக்கர் 15 செண்டு அல்லது 8700 சதுரமீட்டர் பரப்பளவில் அமையும் மனை எண்கள். 1 முதல் 51 வரை*** **"வசந்தம் கார்டன்"** மனைபிரிவிற்கு பத்திர பதிவு செய்ய அனுமதி கோரி பார்வை 1-ல் காணும் கடிதம் மூலம் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு மனை பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்டதை தொடர்ந்து வரைபடம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்பம் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடத்திற்கு ம.வ/மா.ந.ஊ.அ (வே.மா) எண்.**104/2023** நாள்:-23.12.2023 என எண்ணிட்ட மனைப்பிரிவு வரைபடம் மற்றும் நிபந்தனைகள் உட்பட்டு இவ்வரைபடம் அங்கிகரிக்கப்பட்டுள்ளது.

மேலும் பார்வையில் காணும் நகர் ஊரமைப்பு துறையில் சுற்றறிக்கையில் ஒதுக்கீடுகளையும் மற்றும் சாலை மற்றும் பொது உபயோகம், தமிழ்நாடு மின்சார வாரியம், மூலைமுடுக்கு, திறவிடம் ஒதுக்கப்பட்ட இடத்தையும் தானபத்திரம் மூலமாக பதிவு செய்து ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டது. மேலும் மனைப்பிரிவு நிபந்தனைகள் குறித்து உறுதி செய்யப்பட்டு இறுதி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் தெள்ளூர் ஊராட்சி தெருவழி மற்றும் மூலைமுடுக்கு, பொது உபயோகம், திறவிடம் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வேலூர் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் நாள் 12.12.2023 ஆவண எண்.13030/2023 ஆவணம் முன்னிலைக்கு தானமாக 2302.10 சதுரமீட்டர் தெள்ளூர் ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டு கொள்கை அளவிலான ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் / இணை இயக்குநர் (முகூபொ) அவர்களால் மனைப்பிரிவிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டதை தொடர்ந்து இவ்வரைபடம் அங்கீகரிக்கப்படுகிறது.

இணைப்பு : வரைபடம் மற்றும் மனைபிரிவு நிபந்தனைகள்

பெறுநர்.

திரு.V.K.மகேஷ் மற்றும் V.புருஷோத்தமன்,
E.ஆறுமுகம், G.வெங்கடேசன், P.கார்த்தி,
L.லதா, T.சீனிவாசன்
கதவு எண்.22, புதிய சங்கரன்பாளையம் ரோடு,
சங்கரன்பாளையம், வேலூர்.

தலைவர்
தெள்ளூர் ஊராட்சி
வேலூர் ஒன்றியம், வே.மா.

ஊராட்சி மன்ற தலைவர்
தெள்ளூர் ஊராட்சி, அணைக்கட்டு வட்டம்.
வேலூர் ஊராட்சி ஒன்றியம். வே.மா.

நகல்.

1. சார் பதிவாளர், மாவட்டப் பதிவாளர் அலுவலகம், வேலூர்.
2. நகர் ஊரமைப்பு ஆணையர், எண்.807, அண்ணா சாலை, சென்னை, அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
3. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் / இணை இயக்குநர், (முகூபொ) வேலூர் மண்டலம், வேலூர் - 632 001, அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
4. வட்டார வளர்ச்சி அலுவலர், வேலூர் ஊராட்சி ஒன்றியம்.